# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## OS.No.132/2014

Deposition of PW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 15.03.2022. Evidence Recorded Time: 02.55 P.M to 03.50 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சம்பத்குமார் | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | கோவிந்தசாமி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. அந்த அழைப்பாணையின் படி 10.08.2001-ல் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.10/2001 தேதியி உயில் சாசனத்தையும், 13.07.2011-ம் தேதியிட்ட ஆவண எண்.951/2011-ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தையும் இத்துடன் ஆஜர் செய்துள்ளேன். அது சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆகும். சா.சா.ஆ.1 உயில் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் கோசலை என்பவருக்கு அமராவதி எழுதிக்கொடுத்த உயில் ஆவணம் ஆகும். அந்த உயில் ஆவணத்தில் 2 அயிட்ட சொத்து எழுதப்பட்டுள்ளது. 2 வது அயிட்ட சொத்து சிங்கிரிப்பட்டி கிராமம், பட்டா எண்.31, பழைய சர்வே எண்.452/16 இதற்கு புதிய சர்வே எண்.544/10 புஞ்சை ஹெக்.0.56.0 1 ஏக்கர் 38 செண்ட் நிலமாகும். இதற்கு சக்குபந்தி விவரம் சிங்காரம் நிலத்திற்கு வடக்கு, கணேசன் நிலத்திற்கு கிழக்கு, கோவிந்தராஜ் விவசாய நிலத்திற்கு தெற்கு, பொன்னாம்மாள் விவசாய நிலத்திற்கு மேற்கு இதன் மத்தியில் மேற்கண்ட பு.ஹெக். 1 ஏக்கர் 38 செண்ட் ஆகும். மேற்படி விவரங்கள் சா.சா.ஆ.1-ல் காணப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் சா.சா.ஆ.1 உயில் ஆவணம் எங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுதான். அந்த சொத்து விவரத்தில் 2 வது அயிட்டதில் மாறுபாடு உள்ளதாக சாட்சி சொன்னபோது அதை இந்த சாட்சி மூலம் பதிவு செய்யமுடியாது என்று பிரதிவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆகவே அதை பொறுத்து தீர்ப்பில் பகரப்படும். சா.சா.ஆ.2 ஆவணம் கோசலை, சரவணன், லட்சுமி, ஜானகி ஆகியோர்கள் நல்லதம்பி, சசிக்குமார், பொன்னுசாமி ஆகிய மூன்று நபர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆகும். அந்த

கிரையபத்திரத்தில் தாய் பத்திரமான உயில் ஆவணம் ஆவண எண்.10/2001 மேட்டுர் சார்பதிவாளர் மூலம் கொளத்துார் முகாமில் பதிவு செய்யப்பட்டது. சொத்து விவரத்தில் சிங்கிரிப்பட்டி கிராமம் புதிய சர்வே எண்.546/6, பு.ெஹக். 0.40.0 ற்கு தீர்வை ரூ.0.50 உள்ள இதற்கு புஞ்சை ஏக்கர் 0.99 செண்ட் அளவுள்ள புஞ்சை விவசாய நிலம் பூராவும். இதற்கு சக்குபந்தி விவரம் கணேசன் நிலத்திற்கு கிழக்கு, பொன்னாம்மாள் நிலத்திற்கு மேற்கு, சிங்காரம் நிலத்திற்கு வடக்கு, கோவிந்தராஜ் நிலத்திற்கு தெற்கு இதன் மத்தியில் மேற்கண்ட பு.ஏ.0.99 செண்ட் அளவுள்ள புஞ்சை விவசாய நிலம் பூராவும். கிரைய பத்திரமானது உயில் மூலம் கிடைத்த சொத்தை கிரையம் மூலமாக எழுதிக்கொடுத்தாக உள்ளது. நான் கொண்டுவந்துள்ள சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆகியவற்றில் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் ஆகியவை மாறுபட்டுள்ளது.

<u>**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u> இல்லை.

<u>**4,6 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 ஆவணங்களை என்னுடைய அலுவலகத்திலிருந்து எடுத்து வந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் எங்கள் பராமரிப்பிலும் இல்லை என்றால் அந்த ஆவணத்தின் நகல் எங்கள் அலுவலகத்தில் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணமானது சான்றிட்ட ஜெராக்ஸ் நகல்தான் என்றால் சரிதான். இதே உயில் மற்றும் கிரைய ஆவணம் சம்மந்தமாக மேட்டுர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன். ஒரு ஆவணத்தை பொறுத்து வழக்கு நிலுவையில் இருக்கும்போது அதைப்பற்றி கருத்து சொல்லமுடியாது என்றால் சரிதான். சா.சா.ஆ.2- ஆவணத்திற்கு சா.சா.ஆ.1 தான் மூல ஆவணம் என்றால் சரிதான். பொதுவாக ஒரு ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக மூல பத்திரத்திற்கு முரணான இருந்தால் அதை பதிவு செய்யமாட்டோம். ஒருவேளை அந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டுவிட்டால் அதன் பின்பு மேல் நடவடிக்கை எடுக்க மாவட்ட பதிவாளருக்கு பரிந்துரை செய்வோம். பத்திரப்பதிவானது தவறாக பதிவு செய்யப்பட்டால் அந்த தவறிற்கு எங்கள் கவனகுறைவுதான் காரணம் என்றால் இருக்கலாம். ஒரு பத்திரத்தை பதிவு செய்யும்போது அதனுடைய எல்லை அளவுகள் மற்றும் சர்வே எண்கள் ஆகியவை மாறுபட்டிருந்தால் அது தவறு என்றால் அந்த பத்திரப்பதிவும் தவறு என்றால் சரிதான்.

சா.சா.ஆ.1 –ல் எந்த தவறும் இல்லாததால் தான் சா.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்டது என்றாலும் ஒருவேளை சா.சா.ஆ.1–ல் தவறு இருந்தால் அப்பொழுதே நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றால் அவ்வாறு சொல்லமுடியாது. சா.சா.ஆ.2 ஆனது சா.சா.ஆ.1–ஐ பார்த்து முறையாக எழுதப்பட்டுள்ளது என்றாலும் அதில் தவறு இல்லை என்றாலும் அதைபற்றி நான் சொல்லமுடியாது.

<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

சா.சா.ஆ.2–ல் பட்டா எண்.911–ன் படி பாத்தியப்பட்டது என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். ஒரு ஆவணத்தின் பதிவுக்கு முன்னர் அதற்குரிய வில்லங்கசான்று, அதன் மூல பத்திரம், சுவாதீன அனுபவங்களை சரிபார்த்துதான் பதிவிற்கு எடுத்துக்கொள்வோம் என்றால் 2012–ம் வருடத்திற்கு பின்னர் மேற்சொன்ன நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. சா.சா.ஆ.2 ஆவணம் முத்திரை தீர்வை குறைவு என்ற காரணத்திற்காக அந்த ஆவணம் எங்களுடைய பராமரிப்பில்தான் இருந்தது என்றால் சரியல்ல. பத்திரம் பதிவு செய்யப்பட்டு அதன் பின்னர் தணிக்கையில் முத்திரை குறைவு கண்டுபிடிக்கப்பட்டு அதன் பின்னர் வசூர் செய்யப்பட்டது. அந்த தணிக்கையிலேயே சொத்து விவரம் மாறுபட்டு இருப்பது தெரியவந்திருந்தால் தணிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அது குறிப்புகளை பார்த்துதான் சொல்லமுடியும். தணிக்கையில் எந்த வித தவறும் தெரியப்படுத்திவில்லை என்பதால் சா.சா.ஆ.2 முறையாக எழுதப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட நகல் ஆகும். எங்கள் அலுவலகத்தில் வா.சா.ஆ.2 ஆவணம் இறப்பு சான்று கொண்டுவந்த நபருக்கு கொடுக்கப்பட்டது என்ற குறிப்பு எதுவும் இல்லை என்றால் அந்த குறிப்பு அந்த ஆவணத்தில் குறிப்பிடப்படாது. சா.சா.ஆ.2 ஆவணம் ஆனது முறையான ஆவணங்களை பரிசீலனை செய்யப்பட்டு முறையாக பதிவு செய்யப்பட்டது என்பதை மறுக்கமுடியாது என்றால் சரிதான்.

ஒம்/–PW3

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.